செய்தி வெளியீடு :388 நாள் : 25.05.2008

**செய்தி வெளியீடு**

**முதலமைச்சர் கலைஞர் அவர்கள்**

**காவல்துறையின் உயர் அதிகாரிகளுடன்**

**காவல் துறை பணிகள் குறித்து ஆய்வு**

தமிழக முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் தலைமையில் இன்று (25.05.2008) நடைபெற்ற காவல்துறை சீராய்வுக் கூட்டத்தில் தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி, உள்துறைச் செயலாளர் திருமதி.எஸ். மாலதி, பொதுத்துறைச் செயலாளர் திரு.தேவ.ஜோதிஜெகராஜன், காவல்துறை தலைமை இயக்குநர் திரு.கே.பி.ஜெயின், சென்னை மாநகர காவல் ஆணையர் திரு.நாஞ்சில் குமரன் மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்த ஆய்வின்போது, மாநிலம் முழுவதும் சட்டம் ஒழுங்கு பிரச்சினை தீவிரமாக கண்காணிக்கப்படுதல், சாதி, மதப் பூசல்கள் ஏற்படாமல் தடுத்திட மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள், தலைவர்களின் சிலைகள் அவமதிக்கப்படுவது போன்ற நிகழ்வுகள் நடைபெறாமல் தடுத்தல், அத்தகைய முயற்சிகளில் ஈடுபடுபவர்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கைகளை எடுத்தல், தீவிரவாதக் குழுக்கள் தமிழகத்தில் காலூன்றாவண்ணம் தொடர்ந்து கண்காணித்தல், ஆகிய பல்வேறு பொருள்கள் பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டு, காவல்துறைத் தலைவர் மற்றும் மண்டல காவல்துறைத் தலைவர்களுக்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டன.

கள்ளச்சாராய சாவுகள் மாநிலத்தின் எந்த பகுதிகளிலும் நடைபெறாமல் தடுத்திட மாநிலம் முழுவதிலும் கள்ளச்சாராயம் காய்ச்சுவதில் எவரேனும் ஈடுபட்டாலோ, எவரேனும் அவர்களுக்குத் துணைபுரிந்தாலோ, அவர்கள்மீது கடுமையான நடவடிக்கைகளை எடுத்திட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் தீவிரவாதக் குழுக்களால் ஈர்க்கப்படுவதைத் தடுத்திட தேனி, திண்டுக்கல், நீலகிரி மாவட்டங்களில் சிறப்பு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்திட அரசு முடிவு செய்துள்ளது. எனவே, இந்த வளர்ச்சித் திட்டங்களைப் பயன்படுத்தி சம்பந்தப்பட்ட காவல்துறை

அலுவலர்கள் இந்தப் பகுதிகளில் தீவிரவாத அமைப்புகள் தலைதூக்காவண்ணம் விழிப்புடன் கண்காணித்திட வேண்டும் என்றும்;

சென்னை நகரத்தில் மட்டுமல்லாமல், தமிழகத்தின் மற்ற அனைத்துப் பகுதிகளிலும் வாகனப் போக்குவரத்துகள் தங்குதடையின்றி நடைபெறத் தேவையான நடவடிக்கைகளை எடுத்திடல் வேண்டும் என்றும்; ஷேர் ஆட்டோவில் அளவுக்கு அதிகமான பேர் பயணம் செய்வதைத் தடுத்தல், ஆட்டோக்களில் கூடுதல் கட்டணம் வசூலிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுத்தல் ஆகிய நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும் என்றும் முதலமைச்சர் கலைஞர் காவல்துறை அதிகாரிகளிடம் வலியுறுத்தினார்.

அண்மைக்காலத்தில் தங்கக் காசு விற்பது போன்ற பொருளாதாரக் குற்றங்கள், படித்த இளைஞர்களுக்கு வேலை வாங்கிக் கொடுப்பதாகக் கூறி ஏமாற்றுதல் போன்ற குற்ற நிகழ்வுகளில் சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதோடு மட்டுமல்லாமல், இனிவரும் காலங்களில் இத்தகைய நிகழ்வுகள் நடைபெறா வண்ணம் தீவிரமாகக் கண்காணித்திட வேண்டும் என்றும் ;

மாநிலத்தின் நெடுஞ்சாலைகளில் தற்பொழுது ஏற்படும் சாலை விபத்துகளைக் குறைத்திட காவல்துறையும், போக்குவரத்துத் துறையும் இணைந்து நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்றும் முதலமைச்சர் கலைஞர் அறிவுரை வழங்கினார்.

ரவுடிகள் மற்றும் கூலிப்படையினரின் நடவடிக்கைகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு அத்தகையோரின் சமூகவிரோதச் செயல்கள் கட்டுப்படுத்தப்படவேண்டும் என்றும்;

தமிழகக் கடலோரப்பகுதிகளில் சமூக விரோத நடவடிக்கைகள் எதுவும் நிகழாத வகையில் கண்காணிப்புப் பணிகளைத் தீவிரப்படுத்திட வேண்டும் என்றும்;

திருட்டு, கொலை, கொள்ளை போன்ற சம்பவங்களிலும், பெண்களுக்கு எதிரான குற்றங்களிலும் ஈடுபடும் குற்றவாளிகளின் மீது பாரபட்சமின்றி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும், சமுதாயக் காவல் பணி

(Community Policing) போன்ற முறைகள் மூலமும் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தியும் குற்ற நிகழ்வுகள் குறைய காவல்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்;

சிறைச்சாலை விதிகளில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு, சிறைச்சாலைகளில் நடைபெறும் குற்ற நிகழ்வுகளைத் தடுக்க தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் முதலமைச்சர் கலைஞர் காவல்துறை அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

* * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை .**